பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
15 04 2024 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிஜேபியின் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படக்கூடிய வாக்குறுதிகள் என அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தமிழகத்தின் வளர்ச்சிக்காக மத்திய அரசு வழங்கிய நிதி குறித்து பிஜேபி தவறான தகவல்களைத் தெரிவிப்பதாக திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் கடந்த 3 ஆண்டு காலத்தில் மாநில அரசின் கடன் மூன்று லட்சம் கோடி ரூபாய் அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் மீன்பிடி தடைக்காலம் நள்ளிரவு முதல் தொடங்கியுள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 20 ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<>>>>

பிஜேபியின் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படக்கூடிய வாக்குறுதிகள் என அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் நேற்று பிற்பகல் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், சுதந்திரத்திற்குப் பிறகு பல ஆண்டுகளாக, ஆட்சியில் இருந்த காங்கிரஸ், ஒரே குடும்பத்தின் மூலம் நாட்டை ஆட்சி செய்தது என்று தெரிவித்தார்.

அரசியலமைப்புச் சட்டத்தை முழுமையாக மதித்துப் பின்பற்றும் கட்சியாக பிஜேபி திகழ்கிறது என்று அவர் கூறினார்.

ஆனால் பிஜேபி ஆட்சியில் அரசியலமைப்பும் ஜனநாயகமும் ஆபத்தில் இருப்பதாக காங்கிரஸ் வதந்திகளை பரப்பியதாக அவர் தெரிவித்தார்.

பிஜேபியின் தேர்தல் அறிக்கை வளர்ச்சிக்கானது என்றும் எதிர்க்கட்சிகளின் தேர்தல் அறிக்கை நாட்டை பொருளாதார ரீதியாக திவாலாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் எண்ணற்ற சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளதாகவும், ஆனால் இது ஒரு முன்னோட்டம் மட்டுமே என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே தமிழகத்தின் திருநெல்வேலி மக்களவை தொகுதிக்கு உட்பட்ட அம்பாசமுத்திரத்தில் திரு நரேந்திர மோடி இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

<<<>>>>

தமிழகத்தின் வளர்ச்சிக்காக மத்திய அரசு வழங்கிய நிதி குறித்து பிஜேபி, தவறான தகவல்களைத் தெரிவிப்பதாக திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான திரு மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கடந்த பத்தாண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சிக்காக 10 லட்சத்து 76 ஆயிரம் கோடி வழங்கப்பட்டுள்ளதாக பிஜேபி கூறும் நிலையில், உண்மையில் ஐந்தரை லட்சம் கோடி ரூபாயை மட்டுமே கொடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளில் தமிழகத்தில் செலவழிக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு என மத்திய அமைச்சர்கள் விளக்க முடியுமா என திரு மு.க. ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

<<<>>>>

மத்திய அரசின் திட்டங்களை தங்களது திட்டம் போல் தமிழக திமுக அரசு விளம்பரப்படுத்திக் கொள்வதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மத்திய அரசு வழங்கிய நிதி தொடர்பாக, திமுக தலைவரும் முதலமைச்சருமான திரு மு.க. ஸடாலின் பொய்யான தகவல்களைத் தெரிவிப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

மத்திய அரசு ஒரு லட்சத்து எழுபதாயிரம் கோடி ரூபாய்தான் தமிழகத்துக்குக் கொடுத்திருக்கிறது என திரு உதயநிதி ஸ்டாலின் கூறி இருந்ததாகவும் ஆனால் திரு மு.க. ஸ்டாலின் இப்போது மாறுபட்ட வகையில் தகவலைத் தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பதற்றத்தில் திமுக-வினர் இதுபோல பேசுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மின் கட்டண உயர்வு, சொத்து வரி உயர்வு, பத்திரப் பதிவு கட்டண உயர்வு, பால் விலை உயர்வு போன்றவற்றால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

திமுக வாக்குறுதியளித்த மூன்றரை லட்சம் அரசு வேலைவாய்ப்புகள் என்ன ஆனது என்பதை முதலமைச்சர் மக்களுக்கு விளக்க முடியுமா என திரு அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டு காலத்தில் மாநில அரசின் கடன் மூன்று லட்சம் கோடி ரூபாய் அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

விழுப்புரத்தில் நேற்றிரவு தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மத்திய மாநில அரசுகளின் திறமையற்ற செயல்பாடுகள் காரணமாக விலைவாசி அதிகரித்துள்ளது என்று குற்றம் சாட்டினார்.

தமிழகத்தில் மின்கட்டணம் 52 சதவீதமும், சொத்துவரி 100 சதவீதமும் உயர்த்தப்பட்டுள்ளதால் மக்கள் இன்னலுக்கு ஆளாகியுள்ளதாக திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

பிஜேபி ஆட்சியில் சிறு, குறு, நடுத்தர தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழக காங்கிரஸ் தலைவர் திரு செல்வப் பெருந்தகை கூறியுள்ளார்.

பெரம்பலூரில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்ற பிஜபி-யின் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்றார்.

எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஆட்சி அமைத்தால் விவசாய கடன் தள்ளுபடி, வேளாண் விளை பொருட்களுக்கு எம்எஸ் சுவாமிநாதன் கமிட்டி பரிந்துரைப்படி விலை நிர்ணயம் போன்றவை செயல்படுத்தப்படும் என்று திரு செல்வப் பெருந்தகை தெரிவித்தார்.

<<<<>>>>

மத்தியில் காங்கிரஸ் மற்றும் பிஜேபி அரசுகளால் தமிழகத்தின் உரிமை பாதிக்கப்பட்டுள்ளதாக நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கூறியுள்ளார்.

மயிலாடுதுறையில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், இரு கட்சிகளின் அரசுகளுமே காவிரி பிரச்சினை, மீனவர் பிரச்சினை போன்றவற்றில் அக்கறை செலுத்தவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலையொட்டி, 100 சதவீத வாக்குப் பதிவை உறுதி செய்ய, தமிழகம் முழுவதும் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சென்னை பெசன்ட் நகரில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாநகராட்சி ஆணையரும் தேர்தல் அலுவலருமான திரு ஜெ ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 33 வகையான நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

வாக்குப் பதிவு தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் வாக்கு எண்ணும் மையங்கள் தொடர்பான ஏற்பாடுகளும் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளது என்றார்.

வாக்களிக்க சென்னையில் இருந்து வெளியூர்களுக்குச் செல்பவர்கள் முன்கூட்டியே சொந்த ஊர்களுக்குச் செல்வது நல்லது என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே மக்கள் சொந்த ஊர்களுக்கு சென்று வாக்களிக்க வசதியாக ஏப்ரல் 17 மற்றும் 18-ம் தேதிகளில், சென்னையில் இருந்து கூடுதலாக 2 ஆயிரத்து 970 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துத்துறை அறிவித்துள்ளது. பிற ஊர்களில் இருந்து 3,060 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் எனவும் 4 நாட்களில் 10 ஆயிரத்து 150 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் முதல் முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்திலும் இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர், முதல்முறையாக வாக்களிப்பது மகிழ்ச்சியாக உள்ளது என்று தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் மீன்பிடித் தடைக் காலம் நள்ளிரவு முதல் அமலுக்கு வந்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரைக்கு திரும்பி உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதேபோல் கன்னியாகுமரி, ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களிலும் விசைப்படகுகள் கரைக்குத் திரும்பி உள்ளதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட பங்களாதேஷ் சரக்குக் கப்பலை கொள்ளையர்கள் நேற்று விடுவித்தனர்.

------------

கடற்படையினருக்கான வீரதீர விருகளை மும்பையில் கடற்படைத் தளபதி அட்மிரல் ஹரிகுமார் நேற்று மாலை வழங்கினார்.

------------

நாமக்கல்லில் வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சியர் திருமதி உமா ஆய்வு செய்தார்.

------------

*<u>விளையாட்டுச் செய்தி</u>*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 20 ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

மும்பையில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 206 ரன் எடுத்தது.

207 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய மும்பை அணி, 6 விக்கெட் விக்கெட் இழப்புக்கு 186 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

<<<<>>>>